1974 மார்ச் 29]

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, நெல் தஞ்சாவூரிலே லெவி முறையிலே வாங்கப்படுகிறது. நெல்லுக்கு அதிக விலை கொடுத்தாலும் கூட, சமீப காலத்திலே ஒரு மாதத்திற்குள்ளாக 60 படி மூட்டை 60 ரூபாய்க்கு 70 ரூபாய்க்கு விற்றது இப்போது 75, 80 ரூபாய் என்று கிராமங்களில் விருது நகர் பக்கங்களில் விற்கிறது. இவ்வளவு விலை உயர்த்திக் கொடுத்தாலும் கூட, லெவிக்கு உங்களுக்குக் கொடுக்கிறவர்கள் லாபம் அடைகிறார்களா என்பதைச் சொல்ல முடியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, வியாபாரிகளே லாபத்திற்காகத் தான் வியாபாரம் செய்கிறார்கள். எந்த அளவிற்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமோ அதற்காக லெவி போட்டிருக்கிறோம். வியாபாரிகள் அதிகமான அளவில் கொள்ளையடிக்காத அளவிற்குப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

THIRU A.R. DAMODARAN : Sir, are the Government aware that because of the low procurement price fixed for paddy, the open-market price of paddy is about 40 to 50 per cent above the procurement price resulting in a great deal of hardship to the average consumer?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதற்காகத் தான் லெவி போடுவது. லெவி விலையை விட ஓபன் மார்க்கெட் விலை ஜாஸ்தியாகப் போய்விடுகிறது. கொள்முதல் செய்வதற்கு, இந்த விலைக்குக் கிடைக்கவில்லை என்ற நிலைமையில் தான் லெவி போடுகிறோம். நாம் திடீரென்று லெவி போடுவதே, விலைகளை அட்ஜஸ்ட் செய்வதற்குத் தான். அந்த நோக்கத்தோடு தான் செய்துகொண்டிருக்கிறோம். அதையும் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். எங்கு விலை ஏறினாலும் குறைவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

Foreign Exchange Loan

† 226 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Reserve Bank of India has informed the Tamil Nadu Industrial Investment Corporation Limited about the availability of foreign exchange loan from the Reserve Bank of India; and

† *27—3—1974 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.*

(b) if so, the details thereof?

அன்னியச் செலாவணிக் கடன்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அன்னியச் செலாவணிக் கடன் கிடைப்பது குறித்து இந்திய ரிசர்வ் வங்கி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்குத் தெரிவித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) உலக வங்கியின் ஓர் உறுப்பான அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனம் (IDA) பல்வேறு நாட்டுச் செலாவணிகளில் 250 லட்சம் அமெரிக்க டாலருக்குச் சமமான கடன் வசதியை இந்திய அரசுக்குக் கிடைக்கச் செய்துள்ளது. தொழில் நிறுவனங்கள் (தொழில் உற்பத்திக்குரிய) மூலதனச் சாதனங்களை இறக்குமதி செய்யவும் அயல்நாட்டுத் தொழில் நுட்ப வல்லுநர்களைப் பெறவும், மேற்சொன்ன அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனக் கடன் வசதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் தொழில் பிரிவுகளுக்கு அந்நியச் செலாவணிக் கடன் வழங்கப்படுகிறது. பேரவை முன் வைக்கப்பட்டுள்ள சிறுவெளியீட்டில் @ (Brochure) இத்திட்டத்தின் விவரங்கள் உள்ளன.

Sales Tax Concessions

† 227 *Q.*—THIRU A. AYYANAN AMBALAM (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to grant Sales Tax concessions to Small Scale Industry Units as a form of incentive; and

(*b*) if not, the reasons therefor?

@ அச்சடிக்கப்படவில்லை.

27—3—1974 ஆம் நாள் வினுப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.